# சீர்காழி நகராட்சி



**2023–ம் ஆண்டு ஜுன் மாதம் 19–ஆம் தேதி நாள்.19.06.2023 திங்கள் கிழமை காலை 10.30 மணிக்கு நகர்மன்ற கூடத்தில் நடைபெற்ற சாதாரண கூட்டம் நடவடிக்கை.**

**திருமதி.R.துர்காபரமேஸ்வரி.MBA.,**
**நகர்மன்ற தலைவர்,**
**சீர்காழி நகராட்சி.**

| | | |
|---|---|---|
| பொருள் எண்-1 | சீர்காழி நகராட்சியில் பொதுசுகாதாரபிரிவில் தனியார் மகளிர் சுய உதவி குழு மூலம் ஒப்பந்த அடிப்படையில் 80 தூய்மைபணியாளர்கள் மூலம் திடக்கழிவு மேலாண்மை பணிகள் செய்யப்பட்டு வருகிறது. மேற்படி பணியாளர்களின் ஒப்பந்த பணிகாலம் 30.04.2023 வுடன் முடிவடையும் நிலையில் உள்ளது, எனவே திடக்கழிவு மேலாண்மை திட்டத்தை திறம்பட செயல்படுத்தவும் குறிப்பாக தினத்தோறும் குடியிருப்புகளில் சேகரம்மாகும் திடக்கழிவுகளை மட்கும் மற்றும் மட்காத குப்பைகளாக பிரித்து மட்கும் குப்பைகளை உரமாக்க MCC யில் கொண்டு சேர்த்தல், மட்காத பிளாஸ்டிக் கழிவுகளை சிமெண்ட் ஆலைக்கு அனுப்பி வைத்தல் மற்றும் நகரத்தின் பொது சுகாதாரத்தை பாதுகாத்தல், போன்ற பணிகளை தினசரி மேற்கொள்ள வேண்டியுள்ளது.<br>எனவே மேற்கண்ட இப்பணிகளை தனியார் மகளிர் சுய உதவிக் குழு மூலம் பணிபுரியும் 80 தூய்மை பணியாளர்களையும், மாவட்ட ஆட்சித் தலைவர் மயிலாடுதுறை அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.8945/2022/ஈ1 நாள்: 24.08.2022 ஆம் தேதிய உத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ள விலை விகிதமான நாள் ஒன்றிர்கு **ரூ.460/–** என்ற விகிதத்தில் 01.05.2023 முதல் 31.05.2023 வரையிலான 1 மாத காலத்திற்க்கு மட்டும் தூய்மைபணி மேற்கொள்ள "**அப்துல்கலாம்**" மற்றும் "**அரும்பு**" மகளிர் சுய உதவி குழுகளுக்கு பணி நீட்டிப்பு செய்திடவும், அதற்கான உத்தேச செலவினத் தொகையாக **ரூ.11,40,800/–**ற்கு நகராட்சிப் பொது நிதியிலிருந்தும் திடக்கழிவு மேலாண்மை பயண்பாட்டுக் கட்டணக் கணக்கிலிருந்தும் செலவினம் மேற்கொள்ளவும், மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலக குறிப்பு:</u> 1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. நகர் மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணிகள் மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம்.<br>ந.க.எண்: **2669/2021/எச்1** | தீர்மான எண்-949, நாள்.19.06.2023 அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. |
| பொருள் எண்-2 | நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் கடித ந.க.எண் 20543/2021/தி1–1 நாள் : 03.04.2023.–ன் படி மாண்புமிகு நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் அவர்கள் 2023–24 ஆம் ஆண்டு சட்டமன்ற கூட்டத்தொடரில் நகராட்சி நிர்வாகத்துறை மான்ய கோரிக்கையின் போது, சீர்காழி நகராட்சி பேருந்து நிலையம் நவீன முறையில் மேம்படுத்தப்படும் என்ற அறிவிப்பு மற்றும் சீர்காழி நகராட்சிக்கு சொந்தமான இடத்தில் புதிதாக தினசரி மீன்மார்கெட் கட்டப்படும் என்ற அறிவிப்பும் வெளியிடப்பட்டுள்ளதால், மண் பரிசோதனை செய்து சான்று வழங்ககோரியும் மேலும் இந்நகராட்சியில் நடைப்பெற்று வரும் திட்ட பணிகளான ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் தளவாடப் பொருட்கள் மீட்பு மையம் ஆகிய கட்டிடங்களின் கம்பி தர ஆய்வு செய்து வழங்கிடவும் அண்ணா பல்கலைக்கழகம் பட்டுக்கோட்டைக்கு இந்நகராட்சியால் கடிதம் அனுப்பபட்டது. மேற்படி நிறுவனத்திடம் இருந்து அதற்கான பட்டியல் கீழ்கண்டுள்ளவாறு வரப்பெற்றுள்ளது. மேற்படி நிறுவனத்திற்கு பட்டியல் தொகை நகராட்சி பொதுநிதியிலிருந்து வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>1) புதிய ரேருந்து நிலையம் மேம்படுத்தும் பணி ரூ 30000.00 | தீர்மான எண்-950, நாள்.19.06.2023 அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. |

<table>
<tr>
<td></td>
<td>2) மீன் மார்கெட் கட்டும் பணி ரூ 30000.00<br>3) ஆரம்ப சுகாதாரநிலையம் ரூ 40000.00<br>4) MRF தளவாடப்பொருட்கள் மீட்பு மையம் ரூ 40000.00<br><u>அலுவலக குறிப்பு</u> : மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண் : 798/2023/இ1.</td>
<td></td>
</tr>
<tr>
<td>பொருள் எண்-3</td>
<td>சீர்காழி ஸ்ரீ சட்டைநாத சுவாமி தேவஸ்தானம் கும்பாபிஷேகம் முன்னிட்டு 15.05.2023 முதல் 25.05.2023 வரை நகர வீதிகள் மற்றும் உட்புறங்களில் பொது சுகாதாரம் , தற்காலிக கழிவறை (Temproary Toilet ) மற்றும் குடிநீர் வசதிகள் மூன்று இடங்களில் இரண்டு இருக்கைகள் கொண்ட தற்காலிக கழிவறை மற்றும் ஆறு இடங்களில் Syntex Tank அமைத்து லாரி மூலம் தண்ணீர் நிரப்பி குடிநீர் வசதி செய்ய ரூ. 4.00 இலட்சம் மதிப்பீட்டில் பணிகளை மேற்கொள்ள 16.05.2023 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்டுள்ளவாறு வரப்பெற்றுள்ளன.
<table>
<tr><th>வ.எண்</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>ஒப்பந்</th></tr>
<tr><td>1</td><td>திரு, என்.செந்தில் குமார், பனங்காட்டுத்தெரு</td><td>(-)</td></tr>
<tr><td>2</td><td>திருமதி.டி.ஜீவா ஒப்பந்ததாரர், திருமஞ்சனவீதி சீர்காழி</td><td>(+)</td></tr>
</table>
மேற்கண்டுள்ளவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண் 1–ல் உள்ள ஒப்பந்தப்புள்ளி குறைவாக உள்ளதனை ஏற்று பணியின் அவசரம் அவசியம் கருதி நகர்மன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br><u>அலுவலக குறிப்பு</u> : நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண் : 988/2023/இ1</td>
<td>தீர்மான எண்-951,<br>நாள்.19.06.2023<br>அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.</td>
</tr>
<tr>
<td>பொருள் எண்-4</td>
<td>ஸ்ரீ சட்டைநாத சுவாமி தேவஸ்தானம் அவர்களின் கடித ந.க.எண்: 12/1432 நாள்: 21.04.2023 கடிதத்தின்படி சட்டைநாதசுவாமி தேவஸ்தானத்திற்கு வருகின்ற 24.05.2023 தேதி அன்று கும்பாபிஷேகம் நடைபெற உள்ளது தொடர்பாக சுமார் 2.00 இலட்சம் பக்தர்கள் வந்து செல்வார்கள் எனவும் திருகோவிலின் பரம்பரை அறங்காவலரான தருமபுர ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் தருமபுரத்திலிருந்து பூஜா மூர்த்தியுடன் பக்தர்கள் மற்றும் ஆன்மிக அன்பர்களுடன் பாதயாத்திரையாக நடந்து வர இருக்கிறார்கள் எனவும் , அதுசமயம் 15.05.2023 முதல் 25.05.2023 வரை நகர வீதிகள் மற்றும் உட்புறங்களில் பொது சுகாதாரம், தற்காலிக கழிவறை (Temproary Toilet) மற்றும் குடிநீர் வசதிகள் செய்து தர தெரிவிக்கப்பட்டுள்ளது.<br>எனவே, மூன்று இடங்களில் இரண்டு இருக்கைகள் கொண்ட தற்காலிக கழிவறை மற்றும் ஆறு இடங்களில் Syntex Tank அமைத்து லாரி மூலம் தண்ணீர் நிரப்பி குடிநீர் வசதி செய்ய நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று ரூ. 4.00 இலட்சம் மதிப்பீட்டில் இந்நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மேற்படி பணியினை குறுகிய கால ஒப்பந்தப்புள்ளிகள் கோரி நடவடிக்கை மேற்கொண்டதனையும் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br><u>அலுவலக குறிப்பு</u> :நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண் : 988/2023/இ1.</td>
<td>தீர்மான எண்-952,<br>நாள்.19.06.2023<br>அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.</td>
</tr>
<tr>
<td>பொருள் எண்-5</td>
<td>சீர்காழி நகராட்சிக்கு சொந்தமான பழைய மற்றும் புதிய பேருந்து நிலையங்களில் உள்ள வணிக கட்டிடங்களில் கீழ் கண்டவாறு உள்ள கடைகளின் உரிமதாரர்கள் நகராட்சிக்கு செலுத்த வேண்டிய வாடகை தொகையினை செலுத்தாமல் உள்ளனர்.
<table>
<tr><th>S.No</th><th>Allotment No</th><th>Name</th><th>Shop Address</th><th>Year From</th><th>Total Balance</th></tr>
<tr><td rowspan="2">1</td><td rowspan="2">099/00 0042</td><td rowspan="2">RAJAMANICKKAM.S / ராஜமாணிக்கம் எஸ்</td><td>NEW BUS STAND - IUDP NO :6</td><td rowspan="2">2018-2019 May</td><td rowspan="2">375601.00</td></tr>
<tr><td>GST</td></tr>
</table></td>
<td>தீர்மான எண்-953,<br>நாள்.19.06.2023<br>அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.</td>
</tr>
</table>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 2 | 099/00 0044 | ABDUL HAMEED.A / அப்துல் ஹமீது எ | NEW BUS STAND IUDP NO 8<br>GST | 2020-2021 Jan | 156423.00 |
| 3 | 099/00 0050 | SRINIVASAN. K / சீனிவாசன் கே | NEW BUS-STAND IUDP NO : 14<br>GST | 2019-2020 Jul | 183437.00 |
| 4 | 099/00 0135 | KALIYAMURTHY / கலியமூர்த்தி | OLD BUS-STAND PERMN SHOP NO : 7 GF<br>GST | 2019-2020 Jul | 91436.00 |
| 5 | 099/00 0152 | R.M. VISVALINGAM / விஸ்வலிங்கம் ஆர் எம் | (OLDBUSSTAND)VEG MARKET SHOP-8 IDSMT<br>GST | 2018-2019 Apr | 188103.00 |
| 6 | 099/00 0158 | R. KUMAR / குமார் ஆர் | (OLDBUSSTAND)VEG MARKET SHOP-14 IDSMT<br>GST | 2016-2017 Mar | 196813.00 |
| 7 | 099/00 0159 | S.MALLIGA / மல்லிகா எஸ் | (OLDBUSSTAND)VEG MARKET SHOP-15 IDSMT<br>GST | 2017-2018 Aug | 180754.00 |
| 8 | 099/00 0168 | DHAMOTHARAN / தாமோதரன் | (OLDBUSSTAND)VEG MARKET SHOP-24 IDSMT<br>GST | 2017-2018 Dec | 171412.00 |
| 9 | 099/00 0170 | S.LINGESHWARAN / லிங்கேஸ்வரன் எஸ் | (OLDBUSSTAND)VEG MARKET SHOP-26 IDSMT<br>GST | 2017-2018 Nov | 173864.00 |
| 10 | 099/00 0183 | TMT.J.SUSILA / திருமதி சுஜாதா ஜெ | IDSMT COMMERCIAL COMPLEX OLD BUS SHOP4<br>GST | 2017-2018 Aug | 300285.00 |
| 11 | 099/20 12157 | MUNIANDI.S / முனியாண்டி எஸ் | (OLDBUSSTAND)VEG MARKET SHOP-13 IDSMT<br>GST | 2017-2018 Dec | 169175.00 |
| 12 | 099/20 12199 | NARAYANASAMY.B / நாராயணசாமி பி | OLD BUSSTAND VEG MARKET IDSMT SHOP 29<br>GST | 2017-2018 Aug | 168988.00 |
| 13 | 099/20 12200 | NARAYANASAMY.V / நாராயணசாமி வி | OLD BUSSTAND VEG MARKET IDSMT SHOP 30<br>GST | 2016-2017 Dec | 177425.00 |
| **Total :** | | | | | 2533716.00 |

மேற்கண்டவாறு உள்ள 13 கடைகளின் உரிமதாரர்களுக்கு பல முறை அறிவிப்பு கடிதம் மற்றும் கேட்பு அனுப்பப்பட்டும் நிலுவை தொகை செலுத்தாததால் கடையினை

<table>
<tr>
<td></td>
<td>பூட்டி சீல்வைக்கப்பட்டு ஒரு மாதத்திற்கு மேல் ஆகிய நிலையில் தற்போது வரை எவ்வித நிலுவை தொகையையும் செலுத்தாத நிலையில் உரிமதாரர்களின் மீது உரிய சட்டரீதியான நடவடிக்கை மேற்கொள்வதுடன் நகராட்சிக்கு நிதியிழப்பு ஏற்படாதவகையில் சீல்வைக்கப்பட்ட 13 கடைகளையும் பொதுப்பணித்துறை விலைவிகிதத்தில் வாடகை நிர்ணயம் செய்து பொது/ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி நிபந்தனை அறிவிப்புகள் மற்றும் தினசரிநாளிதழில் விளம்பரம் செய்யலாம்.<br>மேலும் இந்நகராட்சிக்கு சொந்தமான பிடாரி வடக்கு வீதியில் உள்ள கட்டிடத்தின் முதல் தளத்தில் கடந்த 2008 முதல் ஈங்கிவந்த BSNL நிறுவன அலுவலகம் கடந்த 2019 ஆம் ஆண்டு வெளியேறிய நிலையில் வாடகை நிலுவை தொகை ரூ.867180/- செலுத்தாததாலும் கட்டிடத்தினை நகராட்சி வசம் ஒப்படைக்காத நிலையில் இந்நகராட்சியால் வழக்கு எண்-10/2022 மாவட்ட நீதிமன்றம் மயிலாடுதுறை வழக்கு தொடரப்பட்டதை தொடர்ந்து BSNL நிறுவனம் கோட்ட பொறியாளர், கும்பகோணம் அலுவலகத்தில் இருந்து அலுவலர்கள் நேரில் வந்து கட்டிடத்தின் சாவியை ஒப்படைத்துள்ளனர். மேலும் நகரின் மையப்பகுதியில் கட்டிடம் அமைந்துள்ளதால் நகராட்சிக்கு வருவாய் ஈட்டிடவும் நிதி இழப்பினை தடுத்திடவும் இந்நகராட்சிக்கு சொந்தமான பிடாரி வடக்கு வீதியில் உள்ள கட்டிடத்தின் முதல் தளத்தை (2367 சதுரடி) பொதுப்பணித்துறை விலைவிகிதத்தில் வாடகை நிர்ணயம் செய்து பொது/ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொள்ள நிபந்தனை அறிவிப்புகள் மற்றும் தினசரிநாளிதழில் விளம்பரம் செய்யலாம். மேற்கண்டவற்றிற்கான தினசரி நாளிதழ் மற்றும் இதர செலவினங்களுக்கான உத்தேச மதிப்பீடு ரூபாய் ஒரு இலட்சத்திற்கு அனுமதி வழங்க மன்றப்பொருள் வைக்கப்படுகிறது.<br><u>அலுவலக குறிப்பு</u> : மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்-8881/2016/அ1.</td>
<td></td>
</tr>
<tr>
<td>பொருள் எண்-6</td>
<td>சீர்காழி நகராட்சியில், 2022–2023 ஆம் ஆண்டில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் வார்டு எண் 4 ஈசானியத்தெரு உரக்கிடங்கில் தேக்கமடைந்துள்ள மரபு கழிவுகளை அகற்றும் பணிக்கு ரூ.147.20 இலட்சம் மதிப்பீட்டில் 22.08.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட விவரப்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><table><tr><th>வ.எண்</th><th>ஒப்பந்ததாரா் பெயர்</th><th>ஒப்பந்த மதிப்பீட்டைவிட</th></tr><tr><td>1</td><td>M/S Saram Enviro Services Pvt Ltd.,Chennai</td><td>(+) 4.95% மதிப்பீடு விகிதத்தை விட அதிகம்</td></tr><tr><td>2</td><td>M/S Our Land Engineering Works Pvt Ltd,Chennai</td><td>(+) 12.92% மதிப்பீடு விகிதத்தை விட அதிகம்</td></tr></table><u>அலுவலக குறிப்பு</u> : 1.மன்றம் அனுமதிக்கலாம்.<br>2.மேற்படி வரப்பட்ட இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில் குறைந்த ஒப்பந்தபுள்ளியான (+4.95%) கொடுத்துள்ள M/S Saram Enviro Services Pvt Ltd ,Chennai ஏற்று நகர் மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று பணியின் அவசரம் அவசியம் கருதி பணி உத்தரவு வழங்கியதனையும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்:1169/2020/இ1.</td>
<td>தீர்மான எண்-954,<br>நாள்.19.06.2023<br>அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.</td>
</tr>
<tr>
<td>பொருள் எண்-7</td>
<td>சீர்காழி நகராட்சியில் வார்டு எண் 5 ஈசானியத்தெரு உரக்கிடங்கின் அருகில் நவீன எரிவாயு தகனமேடை இந்நகராட்சியின் கட்டுப்பாட்டில் இயங்கி வருகின்றது. நவீன எரிவாயு தகனமேடையின் இயக்குதல் மற்றும் பராமரித்தல் பணி தொடர்பாக, தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாடு வாரியத்தின் இசைவு ஆண்டுதோறும் இந்நகராட்சியால் புதுபிக்கப்பட்டு வருகின்றது. புதுபித்தல் தொடர்பாக தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாடு வாரியம் நாகபட்டினம் அவர்களது கடித எண் FNPM0566/GS/DEE/TNPCB/NPM/2022– நாள் 19.03.2022–ன் படி, நவீன எரிவாயு தகனமேடையின் இசைவாணைக்கட்டணம் (2022–2024–ஆம் ஆண்டிற்கு) ரூ.12200/– செலுத்தி புதுபித்துக் கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டது. இத்தொகையினை அவசரம் அவசியம் கருதி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று தமிழ்நாடு நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15–ன் கீழ் நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்கப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.</td>
<td>தீர்மான எண்-955,<br>நாள்.19.06.2023<br>அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| | <u>அலுவலக குறிப்பு :</u> நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியதனை மன்றம் ஏற்கலாம். ந.க.எண்: **3000/2021/இ1 .** | |
| பொருள் எண்-8 | சீர்காழி நகராட்சியில் வார்டு எண் 5 ஈசானியத்தெரு உரக்கிடங்கின் அருகில் நவீன எரிவாயு தகனமேடை இந்நகராட்சியின் கட்டுப்பாட்டில் இயங்கி வருகின்றது. இத்தகனமேடை எரிவாயு (LPG GAS) மூலம் இயக்கப்படுவதால் பிரதேங்களை எரியூட்டுவதற்கு 10 எண்ணிகையிலான சிலிண்டர்கள் இந்நகராட்சியால் கொள்முதல் செய்யப்பட்டு பிரேதங்கள் எரியூட்டும் பணி நடைப்பெற்றுக் கொண்டு வருகின்றது. எரியூட்டும் பணிக்காக ஒரு சடலத்திற்கு **ரூ.2500/–** வீதம் நகராட்சி கருவூலத்தில் செலுத்தப்பட்டு வருகின்றது. எரியூட்டும் பணி தங்கு தடையுன்றி நடைபெறுவதற்கு சிலிண்டர்கள் அவ்வப்போது எரிவாயு நிரப்பி தயார் நிலையில் வைத்திருக்க அவசியமாகிறது. மத்திய அரசின் மானிய சிலிண்டர் வழங்கும் திட்டத்தின் கீழ் THE NATIONAL MOTHER AGENCY SIRKALI நிறுவனத்தின் வாயிலாக சிலிண்டர்கள் எரிவாயு நிரப்பி தகன மேடைக்கு வழங்கப்படுகிறது. மேற்கண்ட நிறுவனத்தின் மூலம் சிலிண்டர்கள் வழங்கும் செலவீனத்திற்கு பட்டியல் வழங்கவேண்டியுள்ளதால் **(2023–2024–ஆம்** ஆண்டிற்கான) இதற்காகும் உத்தேச செலவீனம் **ரூ.1,00,000/–த்தினை** நகராட்சி பொதுநிதியிலிருந்து வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><u>**அலுவலக குறிப்பு**</u> : மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண் : **3000/2021/இ1** | தீர்மான எண்-956, நாள்.19.06.2023<br>அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. |
| பொருள் எண்-9 | சீர்காழி நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் திடக்கழிவு மேலாண்மை பணிக்கு பயன்படுத்தும் வாகனத்தை இயக்குவதற்கு ஒப்பந்த அடிப்படையில் 3 ஒட்டுநர்கள் (Supply of Man Power) ஆகியோரது, பணிக்காலம் 30.04.2023 ஆம் தேதியுடன் முடிவடைவதால், பணியின் முக்கியதுவம் கருதி மாவட்ட ஆட்சித் தலைவர் மயிலாடுதுறை அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.8945/2022/ஈ1 நாள்: 24.08.2022 ஆம் தேதிய உத்திரவில் குறிப்பிடப்பட்டுள்ள, விலை விகிதமான நாள் ஒன்றுக்கு **ரூ.560/–** வீதம் 1 மாத கால அவகாசத்திற்கு பணி நீடிப்பு செய்தது கொள்ளவும். உத்தேச செலவின தொகை **ரூ.52,080/–க்கு** நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள தற்காலிகமாக தினக்கூலி அடிப்படையில், 01.05.2023 முதல் 31.05.2023 வரையிலான காலத்திற்கு ''ஸ்ரீ பைரவர் மகளிர் சுய உதவிக்குழுவின்'' மூலம் பணிக்கு அமர்த்தி பணிகள் மேற்கொள்ளவும், மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலக குறிப்பு:</u> 1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. நகர் மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணிகள் மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம். ந.க.எண்: **2670/2020/எச்.1** | தீர்மான எண்-957, நாள்.19.06.2023<br>அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. |
| பொருள் எண்-10 | சீர்காழி நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் திடக்கழிவு மேலாண்மை பணிக்கு பயன்படுத்தும் வாகனத்தை இயக்குவதற்கு ஒப்பந்த அடிப்படையில் 3 ஒட்டுநர்கள் (Supply of Man Power) ஆகியோரது, பணிக்காலம் 31.05.2023 ஆம் தேதியுடன் முடிவடைகிறது, இந்நிலையில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் 1 முதல் 24 வரை உள்ள அனைத்து வார்டுகளிலும் குப்பை கழிவுகளை சேகரம் செய்யும் பணி ஒப்பந்த அடிப்படையில் சீர்காழி நகராட்சியில் செயல்படுத்த உரிய பணி ஆணை 19.05.2023 அன்று திரு.சு.தனராஜ் ஒப்பந்ததாரர் அவர்களுக்கு வழங்கப்பட்டு பணிகளை 01.06.2023 முதல் துவங்க அறிவுறுத்தப்பட்டது, இதனிடையில் ஒப்பந்ததாரர் தனது 01.06.2023 நாளிட்ட கடிதத்தில் சொந்த பணியின் காரணமாக தான் 12.06.2023 முதல் தனது பணியினை துவங்குவதாக நகராட்சிக்கு தெரிவித்துள்ளார்.<br>எனவே மேற்கண்ட இப்பணிகளை தனியார் மகளிர்சுய உதவிக் குழு மூலம் பணிபுரியும் 3 ஒட்டுநர்களையும், மாவட்ட ஆட்சித்தலைவர் மயிலாடுதுறை அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.8945/2022/ஈ1 நாள்: 24.08.2022 ஆம் தேதிய உத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ள விலை விகிதமான நாள் ஒன்றிர்க்கு ரூ.560/– என்ற விகிதத்தில் 01.06.2023 முதல் 11.06.2023 வரையிலான 11 நாட்களுக்கு மட்டும் தூய்மைபணி மேற்கொள்ள ''ஸ்ரீபைரவர்'' மகளிர் சுய உதவி குழுவிற்கு பணி நீட்டிப்பு செய்திடவும், அதற்கான உத்தேச செலவினத்தொகையாக **ரூ.18480/–ற்கு** நகராட்சிப் பொது நிதியிலிருந்தும் திடக்கழிவு மேலாண்மை பயன்பாட்டுக் கட்டணக் கணக்கிலிருந்தும் செலவீனம் மேற்கொள்ளவும், மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலக குறிப்பு:</u> 1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. நகர் மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணிகள் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்: 2670/2020/எச்1. | தீர்மான எண்-958, நாள்.19.06.2023<br>அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. |

பொருள் எண்-11

சீர்காழி நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை பணிகளை திறம்பட செயல்படுத்த தூய்மை பணியாளர்களுக்கு தளவாட சாமான்கள் புதியதாக வாங்கி வழங்கும் பணிக்கு இந்நகர்மன்ற **தீர்மான எண்:926 நாள்:28.02.2023-**ல் வரிசை எண்-1ல் அனுமதி அளிக்கப்பட்டதின் பேரில் ஒப்பந்தபுள்ளி கோரியதில் 03.05.2023 3.30 மணியளவில் நகராட்சி ஆணையர் முன்னிலையில் ஒப்பந்தபுள்ளிகள் திறக்கப்பட்டது. அதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தபுள்ளிகள் வரப்பெற்றுள்ளன. வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகளின் ஒப்பு நோக்குபட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | Particulars Name | Ramana Enterprises BKT Appartment Block-A 1th Floor Street Chennai-600061 | A To Z Enterprises 10 Balaji Nagar 6th Street Puzhudivakkam Chennai-600091 |
|---|---|---|---|
| | **அட்டவணை** | **1** | **2** |
| 1 | மண்வெட்டி (மரப்புடியுடன்) | 750.00 | **780.00** |
| 2 | அன்னக்கூடை | 750.00 | **780.00** |
| 3 | அரிவாள் | 660.00 | **700.00** |
| 4 | முள் கம்பி (குப்பைகளை இழுக்கும் 5 அடிநீளம்) | 750.00 | **780.00** |
| 5 | தகடு | 140.00 | **170.00** |
| 6 | சாக்கடை தள்ளும் கரண்டி | 625.00 | **650.00** |
| 7 | கூட்டு மிலார் | 90.00 | **110.00** |
| 8 | கடப்பாரை | 1400.00 | **1500.00** |
| 9 | கை உறை | 110.00 | **140.00** |
| 10 | ஒட்டடை அடிக்கும் ஒட்டடைகுச்சி | 220.00 | **250.00** |
| 11 | வாளி (அலுமினியம்) | 750.00 | **780.00** |

மேற்கண்ட இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில் அட்டவணை வரிசை எண்-1ல் குறிப்பிடப்பட்டுள்ள Ramana Enterprises Chennai, என்ற நிறுவனம் கொடுத்துள்ள குறைந்த ஒப்பந்தபுள்ளியை மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலககுறிப்பு:** 1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று தொகை வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.

ந.க.எண்:**816/2023/எச்1.**

தீர்மான எண்-959, நாள்.19.06.2023 அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

பொருள் எண்-12

சீர்காழி நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை பணிகளை திறம்பட செயல்படுத்த தூய்மை பணியாளர்களுக்கு கிருமிநாசினிகள் வாங்கி வழங்கும் பணிக்கு இந்நகர்மன்ற **தீர்மான எண்:926 நாள்:28.02.2023-**ல் வரிசை எண்-8ல் அனுமதி அளிக்கப்பட்டதின் பேரில் ஒப்பந்தபுள்ளி கோரியதில் 03.05.2023 3.30 மணியளவில் நகராட்சி ஆணையர் முன்னிலையில் ஒப்பந்தபுள்ளிகள் திறக்கப்பட்டது. அதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தபுள்ளிகள் வரப்பெற்றுள்ளன. வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகளின் ஒப்பு நோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | Particulars Name | Ramana Enterprises BKT Appartment Block-A 1th Floor Street Chennai-600061 | A To Z Enterprises 10 Balaji Nagar 6th Street Puzhudivakkam Chennai-600091 |
|---|---|---|---|
| | **அட்டவணை** | **1** | **2** |
| 1 | பிளிச்சிங் பவுடர் | 47.00 | **52.00** |

தீர்மான எண்-960, நாள்.19.06.2023 அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

<table>
<tr>
<td></td>
<td>
<table>
<tr><td>2</td><td>சுண்ணாம்பு பவுடர்</td><td>9.45</td><td>10.50</td></tr>
<tr><td>3</td><td>பினாயில்</td><td>77.00</td><td>85.00</td></tr>
<tr><td>4</td><td>லைசால்</td><td>236.00</td><td>260.00</td></tr>
<tr><td>5</td><td>டாய்லட் பிரஸ்</td><td>94.00</td><td>110.00</td></tr>
</table>
மேற்கண்ட இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில் அட்டவணை வரிசை எண்-1ல் குறிப்பிடப்பட்டுள்ள Ramana Enterprises Chennai, என்ற நிறுவனம் கொடுத்துள்ள குறைந்த ஒப்பந்தபுள்ளியை மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>
<u>அலுவலககுறிப்பு</u>: 1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>
2. நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று தொகை வழங்கியதை மன்றம் ஏற்கலாம். ந.க.எண்:711/2023/எச்1
</td>
<td></td>
</tr>
<tr>
<td>பொருள் எண்-13</td>
<td>
சீர்காழி நகராட்சியில் நகராட்சிக்குட்பட்ட பகுதியில் தினத்தோறும் திடக்கழிவு மேலாண்மை திட்டப் பணிகளான வீடு தோறும் மட்கும் மற்றும் மட்காத குப்பைகளை தரம் பிரித்து வாங்கும் பணிக்கு பயன்படுத்தப்படும் BOV வாகனங்கள் பழுதடைந்து செயல்படாமல் இருப்பதால் தூய்மை பணிகள் மேற்கொள்வதில் தொய்வு ஏற்படுகிறது. எனவே பணியின் அவசர அவசியம் கருதி BOV வாகனங்களை பழுது நீக்கம் செய்யவும் பணி செய்வதற்கு ஆகும் உத்தேச செலவீனத் தொகை ரூ.2.96 இலட்சம் ஆகும். அதில் மாவட்ட ஆட்சியரின் தன் விருப்ப நிதியிலிருந்து 2.00 லட்சம் மேற்கொள்ள மன்ற அனுமதி பெறப்பட்டுள்ளது. மேலும் மீதம் உள்ள தொகை ரூ.0.96யை நகராட்சியின் பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>
<u>அலுவலக குறிப்பு</u>: 1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>
2. நகர் மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணிகள் மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம்.<br>
ந.க.எண்: 1313/2021/எச்1.
</td>
<td>தீர்மான எண்-961, நாள்.19.06.2023 அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.</td>
</tr>
<tr>
<td>பொருள் எண்-14</td>
<td>
சீர்காழி நகராட்சிக்குட்பட்ட பகுதியில் தினத்தோறும் திடக்கழிவு மேலாண்மை திட்டப் பணிகளான வீடு தோறும் மட்கும் மற்றும் மட்காத குப்பைகளை தரம் பிரித்து வாங்கும் பணிக்கு பயன்படுத்தப்படும் BOV வாகனங்கள் பழுது நீக்கம் செய்யும் பணிக்கு 13.03.2023 அன்று கீழ்க்கண்டவாறு மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. வரப்பெற்ற விலைப்புள்ளிகளின் ஒப்பு நோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ.எண்</th><th>ஒப்பந்ததாரர் பெயர் முகவரி</th><th>ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ</th></tr>
<tr><td>1</td><td>Prime India<br>97 C Annapoorna Lay out, New Sidhapudur, Coimbatore 641044</td><td>ரூ.2,95,584/-</td></tr>
<tr><td>2</td><td>Sri Balaaji Steel Faab, 28/16 LIC Colony, Industrial Estate Post Coimbatore 641021</td><td>ரூ.3,13,000/-</td></tr>
<tr><td>3</td><td>Sunfarm Solar Energy<br>6-366 Uramandampalaym,<br>G.N Mills, Coimbatore 641029</td><td>ரூ.3,19,500/-</td></tr>
</table>
மேற்கண்ட மூன்று விலைப்புள்ளிகளில் வரிசை எண்-1 ல் குறிப்பிடப்பட்டுள்ள Prime India Coimbatore, என்ற நிறுவனம் கொடுத்துள்ள குறைந்த விலைப்புள்ளியை மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>
<u>அலுவலக குறிப்பு</u>: 1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>
2. நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று தொகை வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.<br>
ந.க.எண்:1313/2021/எச்1.
</td>
<td>தீர்மான எண்-962, நாள்.19.06.2023 அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| பொருள் எண்-15 | சீர்காழி நகராட்சிகுட்பட்ட பகுதிகளில் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் தஞ்சாவூர், மற்றும் மாவட்ட சுகாதார நலப் பணிகள் இணை இயக்குநர் மயிலாடுதுறை ஆகிய உயர் அலுவலர்களுக்கு தினந்தோறும் தற்காலிக DBC பணியாளர்களால் கொசு புழுக்கள் அழித்தல், முதிர் கொசுக்களை அழித்தல் போன்ற பணிகளில் ஈடுபடும் DBC (Domestic Breeding Checkers) பணியாளர்கள் மற்றும் பணியின் விவரத்தை உரிய படிவத்தில் பூர்த்தி செய்து தெரிவிக்க வேண்டியுள்ளது.<br>மேலும் நகரின் பொதுமக்கள், தன்னார்வ தொண்டு நிறுவன பிரதிநிதிகள், மக்கள் பிரதிநிதிகள் மூலம் பெறப்படும் புகார்களின் மீது நடவடிக்கை மேற்கொள்ளவும், தமிழக அரசின் உத்திரவுப்படி கொரோனா தடுப்பூசி போடப்படும் காலங்களில் DBC பணியாளர்களின் பங்கு முக்கியதுவம் என்பதாலும், மழைக் காலங்களில் ஏற்படும் காய்ச்சல் கண்ட வீடுகளுக்கு சென்று தகவல் சேகரித்தல், மற்றும் 6 Day Block என்ற சுழற்ச்சி முறையில் குடியிருப்பு பகுதிகளுக்கு சென்று தண்ணீரில் உள்ள கொசுப் புழுக்களை அழித்தல், தேவையான நேரங்களில் நில வேம்பு கசாயம் வழங்குதல் போன்ற அத்தியாவசிய பணிகளில் பணியாளர்களை பயன்படுத்த வேண்டியுள்ளது அவசியமாகிறது.<br>எனவே மாவட்ட ஆட்சித் தலைவர் மயிலாடுதுறை அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.8945/2022/ஈ1 நாள்: 24.08.2022ஆம் தேதிய உத்திரவில் குறிப்பிடப்பட்டுள்ள விலை விகிதமான நாள் ஒன்றுக்கு ரூ.460/– என்ற விகிதத்தில் இவ்வலுவலக ந.க.எண்.2187/2019/எச்.1 நாள்:06.08.2020 செயல்முறை ஆணையின் படி இந்நகராட்சியில் மகளிர் சுய உதவிக்குழுவின் மூலம் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்படி பணியாளர்களின் பணிக்காலம் 30.04.2023 ஆம் தேதியுடன் முடிவடைவதால், நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்கள் சென்னை அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.2571/2017/J1 நாள்:23.04.2018ல் குறிப்பிடப்பட்டுள்ள அளவுகோலின்படி, மேலும் 1 மாதகாலத்திற்கு 32 DBC பணியாளர்களை தற்காலிகமாக தினக்கூலி அடிப்படையில், 01.05.2023 முதல் 31.05.2023 வரையிலான காலத்திற்கு ''அன்னை மகளிர் சுய உதவிக்குழுவின்'' மூலம் பணிக்கு அமர்த்தி பணிகள் மேற்கொள்ளவும் அதற்காகும் செலவினம் தொகை **ரூ.4,56,320/–**ற்கு நகராட்சி பொதுநிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலக குறிப்பு:</u> 1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. நகர் மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணிகள் மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம்<br>ந.க.எண்: **2612/2020/எச்1** | தீர்மான எண்-963, நாள்.19.06.2023<br>அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. |
| பொருள் எண்-16 | சீர்காழி நகராட்சியில் அலுவலக பயன்பாட்டிற்கு பயன்பட்டுவரும் பொறியியல் பிரிவில் இயங்கிவரும் TN-P-9187 ஈப்பு வாகனம் கொள்முதல் செய்து 13 ஆண்டுகள் கடந்த நிலையில் தற்போது மேற்படி வாகனம் பழுதாகியுள்ளது. வாகனத்தினை புதுபித்து பழுதுநீக்கம் செய்ய ஆகும் உத்தேச செலவீனம் **ரூ.96,000/–** மற்றும் பேட்டரி புதிதாக கொள்முதல் செய்திட **ரூ.7,000/–** மதிப்பீட்டில் உள்ளூர் விலைப்புள்ளிகள் கோரி நடவடிக்கை மேற்கொள்ளவும், மேலும் இச்செலவீனத்தினை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><u>அலுவலக குறிப்பு</u> : 1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண் : **2107/2017/இ1.** | தீர்மான எண்-964, நாள்.19.06.2023<br>அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. |
| பொருள் எண்-17 | சீர்காழி நகராட்சிக்கு சொந்தமான ஈசானியத்தெரு உரக்கிடங்கில் குப்பைகளை தரம் பிரிக்கும் பணிக்கு வேலை உத்திரவு வழங்கப்பட்டுள்ளது தொடர்பாக, மேற்படி உரக்கிடங்கில் ஏற்கனவே உள்ள மின் இணைப்பு 5KVA திறன் கொள்ளவு கொண்ட இயந்திரங்கள் மட்டுமே இயக்கமுடியும். குப்பைகளை தரம் பிரிக்கும் இயந்திரம் 42KVA மின்திறன் தேவைப்படுவதால் கூடுதல் மின் திறன்கான மின் இணைப்பு பெற தேவையான பணிகள் நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று, மேற்படி பணியினை தமிழ்நாடு நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15–ன் கீழ் மேற்கொள்ளப்பட்டு **ரூ.1,59,518.00/–**யை நகராட்சி பொதுநிதியிலிருந்து வழங்கியதனை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br><u>அலுவலக குறிப்பு</u>: நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியதனை மன்றம் ஏற்கலாம்.<br>ந.க.எண்: **17/2023/இ1** | தீர்மான எண்-965, நாள்.19.06.2023<br>அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. |

**பொருள் எண்-18**

இந்நகராட்சியில் கல்விநிதி 2022-23 இன் கீழ் ரூ.**12.00** இலட்சம் மதிப்பீட்டில் வார்டு எண்:08 தாடாளன் மேற்கு வீதியில் சேதமடைந்த நிலையில் உள்ள அங்கன்வாடி மைய கட்டிடத்தை இடித்து புதிய கட்டிடம் கட்டும் பணிக்கு 27.01.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட விவரப்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்த மதிப்பீட்டைவிட ரூ. |
|---|---|---|
| 1 | M/S Unique Engineers and Contractors, Chennai | (-) 0.04% குறைவு |
| 2 | M/S Aadhin Infratech Pvt Ltd, Chennai | (+) 4.77% அதிகம் |

<u>அலுவலக குறிப்பு</u> : **1.** வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாக (-) 0.04% கொடுத்துள்ள M/S Unique Engineers and Contractors, Chennai அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம். மேலும் பணி அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதிப்பெற்று பணி உத்திரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

ந.க.எண்- **3016/2023/இ1.**

தீர்மான எண்-966, நாள்.19.06.2023
அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

---

**பொருள் எண்-19**

தமிழ்நாடு அரசு செய்திமக்கள் தொடர்பு துறையின் வாயிலாகவும் நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் தொலைபேசி செய்தியின் படி தமிழக முதலமைச்சர் அவர்களின் இரண்டு ஆண்டுகால ஆட்சியில் நடைப்பெற்ற திட்டங்கள் மற்றும் சாதனைகளை குறித்து பொதுமக்கள் பயனடையும்வகையிலும், அறியும் வகையிலும், விளம்பர தட்டிகள் மற்றும் பேருந்து நிலையங்களில் தொலைகாட்சியின் மூலம் விளம்பரம் செய்திட அறிவுறுத்தப்பட்டது.இப்பணி தொடர்பாக நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று உள்ளூர் விலைப்புள்ளிகள் கோரி நடவடிக்கைகள் மேற்கொண்டதனையும் பணியின் அவசரம் அவசியம் கருதி தமிழ்நாடு நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15–ன்கீழ் **ரூ2,09,804/–** நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொண்டதனையும் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u> : நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண் : 704/2023/இ1

தீர்மான எண்-967, நாள்.19.06.2023
அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

---

**பொருள் எண்-20**

சீர்காழி நகராட்சி கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் 7 துவக்கப்பள்ளி 1 உயர்நிலைப்பள்ளி 2 நடுநிலைப்பள்ளி பயிலும் மாணவ மாணவியர்க்கு ஆண்டு பொதுதேர்வு தேர்வுகளுக்கு தயாராவது, போட்டித்தேர்வுக்கு தயார் செய்வது, மாதிரி வினா விடைகள் வழங்குவது, மாணவர்களின் வாசிப்பு திறனை மேம்படுத்தும் விதமாக ஆகியவற்றில் பயனுறும் வகையில், மாணவர்களின் நலன் கருதி தினசரி தமிழ் நாளிதழ் ரூ4.00/– என்ற வீதத்தில் கீழ்காணும் விபரங்களின் படி 12.06.2023 முதல் 31.12.2023 வரை (சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமை ஆகிய இரு தினங்கள் நீங்கலாக ) தினகரன் நாளிதழ் நிறுவனத்திற்கு கீழ் கண்ட நிபந்தனைகளின் அடிப்படையில், வழங்க உத்திரவு வழங்கிடவும், இதற்காகும் செலவீனத்தினை நகராட்சி கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | பள்ளியின்பெயர் | ஒரு நாளைக்கு வழங்கப்பட வேண்டிய பிரதிகளின் எண்ணிக்கை | மொத்தம் வழங்கப்பட வேண்டிய பிரதிகளின் எண்ணிக்கை | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | ஜீன் 2023 (12.06.23 முதல்) | ஜீலை 2023 | ஆகஸ்ட் 2023 | செப்டம்பர் 2023 | அக்டோபர் 2023 | நவம்பர் 2023 | டிசம்பர் 2023 |
| 1 | நகராட்சி தாடளன மேற்கு தொடக்கப்பள்ளி | 1 | 14 | 21 | 22 | 18 | 19 | 22 | 20 |

தீர்மான எண்-968, நாள்.19.06.2023
அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | நகராட்சி தொடக்கப்பள்ளி துறையூர் | 1 | 14 | 21 | 22 | 18 | 19 | 22 | 20 |
| 3 | நகராட்சி தொடக்கப்பள்ளி கோவில் பத்து | 1 | 14 | 21 | 22 | 18 | 19 | 22 | 20 |
| 4 | நகராட்சி தோடக்கப்பள்ளி புளிச்சகாடு | 1 | 14 | 21 | 22 | 18 | 19 | 22 | 20 |
| 5 | நகராட்சி தாடளன் முஸ்லீம் துவக்கப்பள்ளி | 1 | 14 | 21 | 22 | 18 | 19 | 22 | 20 |
| 6 | நகராட்சி தொடக்கப்பள்ளி கீழத்தென்பாதி | 1 | 14 | 21 | 22 | 18 | 19 | 22 | 20 |
| 7 | நகராட்சி தொடக்கப்பள்ளி பனமங்கலம் | 1 | 14 | 21 | 22 | 18 | 19 | 22 | 20 |
| 8 | நகராட்சி நடுநிலைப்பள்ளி பனங்காட்டான் குடி சாலை | 1 | 14 | 21 | 22 | 18 | 19 | 22 | 20 |
| 9 | நகராட்சி நடுநிலைப்பள்ளி ஊழியான்காரன் தோப்பு | 1 | 14 | 21 | 22 | 18 | 19 | 22 | 20 |
| 10 | நகராட்சி உயர்நிலைப்பள்ளி வடக்கு மடவிளாகம் | 2 | 28 | 42 | 44 | 36 | 38 | 44 | 40 |

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்

ந.க.எண் : 1199/2023/இ1.

| | | |
|---|---|---|
| பொருள் எண்-21 | சீர்காழி நகராட்சியில் பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்படும் மேல்நிலை நீர்தேக்கத்தொட்டிகள் கீழ்நிலை நீர்தேக்கத்தொட்டிகள் உள்ள குடிநீரினை குளோரின் பவுடரினை மின்பவர் பம்புகளை கொண்டு சுத்தம் செய்து குளோரின் அளவுகளை சரியான விகிதத்தில் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. தற்சமயம் குறைவான அளவு குளோரின் (பிளிச்சிங் பவுடர்) உள்ளதாகவும் டெங்கு மற்றும் மலேரியா பேன்ற நீர்தொற்று நோய்களிடம் இருந்து பொதுமக்களைகாக்கும் பொருட்டு 40 எண்ணிக்கையிலான குளோரின் பவுடர் (பிளிச்சிங் பவுடர்) மூட்டைகளை கொள்முதல் செய்திட மேற்படி பணியின் அலசரம் அவசியம் கருதி தமிழ்நாடு நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15–ன் கீழ் நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று உள்ளூர் விலைப்புள்ளிகள் கோரி **ரூ.70800/–** குடிநீர் நிதியிலிருந்து செலவீனம் மேற்கொண்டதனை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br>__அலுவலக குறிப்பு__ : நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம். | தீர்மான எண்-969, நாள்.19.06.2023<br>அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. |
| பொருள் எண்-22 | சீர்காழி நகராட்சி புதிய பேரூந்து நிலையத்தில் இயங்கி வரும் அம்மா உணவகம் கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக பொதுமக்களின் நலன் கருதி இயங்கி வருகின்றது. இவ்வுணவகத்தில் உள்ள பாய்லர் அடுப்பு RO குடிநீர் கேஸ் இணைப்பு பைப்லைன்கள் மின்சாதனப்பொருட்கள் பழுதுநீக்கம் செய்திடவும் மிக்ஸீ கிரைண்டர் தேவையான தட்டுகள் டம்ளர்கள் கொள்முதல் செய்திடவும் தரைதளம் கைப்பம்பு மின் மோட்டார் மற்றும் மோட்டார் பொருத்தும் இடம் பராமரிப்பு மேற்கொள்ள ஆகும் செலவீனம் **ரூ.5.00** இலட்சம் நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br>__அலுவலக குறிப்பு__ : 1) மன்றம் அனுமதிக்கலாம்<br>ந.க.எண்- /2023 /இ1. | தீர்மான எண்-970, நாள்.19.06.2023<br>அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. |
| பொருள் எண்-23 | சீர்காழி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் 2023–24 ஆம் ஆண்டிற்கான 6 மாதங்களுக்கு தெருக்களில் உள்ள குடிநீர் வினியோக பகிர்மாணக்குழாய்களில் அடிக்கடி உடைப்பு ஏற்படுவதை சரி செய்திடவும், நகராட்சிக்கு சொந்தமான குடிநீர்குழாய்களை பழுதுநீக்கம் செய்திடவும், பொதுமக்களின் நலன் கருதியும் குடிநீர் வீணாகாமல் தடுத்திடவும்,மற்றும் மழைக்காலங்களில் தொற்று நோய்கள் வராமல்தடுத்திடவும் ரூ 5,00,000/– இலட்சம் மதிப்பீட்டில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரி நடவடிக்கை மேற்கொள்ளவும் இச்செலவீனத்தினை குடிநீர் திட்ட நிதியிலிருந்து வழங்கிடவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>__அலுவலக குறிப்பு :__ மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்1177/2023/இ1 | தீர்மான எண்-971, நாள்.19.06.2023<br>அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. |
| பொருள் எண்-24 | இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் சித்தமல்லி தலைமை நீரேற்று நிலையத்திலிருந்து விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேற்படி மோட்டரை இயக்க இந்நகராட்சியில் போதுமான பணியாளர்கள் இல்லாததால் நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் வழிகாட்டி நெறிமுறையில் ஒப்பந்த அடிப்படையில் Out Source முறையில் பணியாளர்களை அமர்த்தி மேற்கொள்ள Lr,No.539/2005/F.3 நாள்,28.1.2005–ல் அனுமதிக்கப்பட்டுள்ளதன்படி பொதுப்பணிதுறை விலை விகித்தின்படி Electrician Grade-II நிலையில் ஒப்பந்தப்புள்ளி மூலம் பணியாளர்களுக்கு 28.02.2022 அனுமதித்துள்ள நாள் முடிவடையும் நிலையில். 01.06.2023 முதல் 31.12.2023 வரை ஒரு நபருக்கு நாள் ஒன்றுக்கு ரூ.820.00 வீதம் ஐந்து நபர்கள் கொண்டு பணி மேற்கொள்ள ஆகும் செலவீனம் ரூ. 738000/–மற்றும்( ESI மற்றும் EPF ரூ.95940/–) ஆக கூடுதல் தொகை ரூ.833940/–6 மாதத்திற்கு ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கைகள் மேற்கொள்ளவும் மேலும் இதற்கான செலவீனம் இந்நகராட்சியின் குடிநீர் திட்ட நிதி/பொதுநிதியிலிருந்து தொகை வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>__அலுவலக குறிப்பு :__ மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்568/2020/இ1 | தீர்மான எண்-972, நாள்.19.06.2023<br>அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| பொருள் எண்-25 | சீர்காழி நகராட்சியில் பொதுசுகாதாரபிரிவில் தனியார் மகளிர் சுய உதவி குழு மூலம் ஒப்பந்த அடிப்படையில் 80 தூய்மைபணியாளர்கள் மூலம் திடக்கழிவு மேலாண்மை பணிகள் செய்யப்பட்டு வருகிறது. மேற்படி பணியாளர்களின் ஒப்பந்த பணிகாலம் 30.04.2023 வுடன் முடிவடையும் நிலையில் உள்ளது, எனவே திடக்கழிவு மேலாண்மை திட்டத்தை திறம்பட செயல்படுத்தவும் குறிப்பாக தினத்தோறும் குடியிருப்புகளில் சேகரம்மாகும் திடக்கழிவுகளை மட்கும் மற்றும் மட்காத குப்பைகளாக பிரித்து மட்கும் குப்பைகளை உரமாக்க MCC யில் கொண்டு சேர்த்தல், மட்காத பிளாஸ்டிக் கழிவுகளை சிமென்ட் ஆலைக்கு அனுப்பி வைத்தல் மற்றும் நகரத்தின் பொது சுகாதாரத்தை பாதுகாத்தல், போன்ற பணிகளை தினசரி மேற்கொள்ள வேண்டியுள்ளது.<br>இந்நிலையில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் 1 முதல் 24 வரை உள்ள அனைத்து வார்டுகளிலும் குப்பை கழிவுகளை சேகரம் செய்யும் பணி ஒப்பந்த அடிப்படையில் சீர்காழி நகராட்சியில் செயல்படுத்த உரிய பணி ஆணை 19.05.2023 அன்று திரு.R.தனராஜ் ஒப்பந்ததாரர் அவர்களுக்கு வழங்கப்பட்டு பணிகளை 01.06.2023 முதல் துவங்க அறிவுறுத்தப்பட்டது, இதனிடையில் ஒப்பந்ததாரர் தனது 01.06.2023 நாளிட்ட கடிதத்தில் சொந்த பணியின் காரணமாக தான் 12.06.2023 முதல் தனது பணியினை துவங்குவதாக நகராட்சிக்கு தெரிவித்துள்ளார்<br>எனவே மேற்கண்ட இப்பணிகளை தனியார் மகளிர்சுய உதவிக் குழு மூலம் பணிபுரியும் 80 தூய்மைபணியாளர்களையும், மாவட்ட ஆட்சித்தலைவர் மயிலாடுதுறை அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.8945/2022/ஈ1 நாள்: 24.08.2022 ஆம் தேதிய உத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ள விலை விகிதமான நாள் ஒன்றிர்க்கு ரூ.460/– என்ற விகிதத்தில் 01.06.2023 முதல் 11.06.2023 வரையிலான 11 நாட்களுக்கு மட்டும் தூய்மைபணி மேற்கொள்ள "**அப்துல்கலாம்**" மற்றும் "**அரும்பு**" மகளிர் சுய உதவி குழுகளுக்கு பணி நீட்டிப்பு செய்திடவும், அதற்கான உத்தேச செலவினத்தொகையாக **ரூ.4,04,800/–**ற்கு நகராட்சிப் பொது நிதியிலிருந்தும் திடக்கழிவு மேலாண்மை பயன்பாட்டுக் கட்டணக் கணக்கிலிருந்தும் செலவீனம் மேற்கொள்ளவும், மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலக குறிப்பு:</u> 1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. நகர் மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணிகள் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்: 2669/2021/எச்1. | தீர்மான எண்-973, நாள்.19.06.2023<br>அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. |
| பொருள் எண்-26 | சீர்காழி நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை பணிகள் தினசரி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதில் விற்பனை செய்ய இயலாத பிளாஸ்டிக் கழிவுகளை பேலிங் செய்வதற்கு தேவையான (ROPE) ரோப் மற்றும் கிளிப்புகள் தேவைப்படுவதால் ஒராண்டிற்கு தேவைப்படுவதால் ஒராண்டிற்கு தேவையானவற்றை அவ்வபோது வாங்கி பயன்படுத்திக் கொள்வதற்கு இந்நகர்மன்ற தீர்மான எண்.926 நாள்.28.02.2023-ல் வரிசை எண்-4ல் அனுமதி அளிக்கப்பட்டதின் பேரில் 19.05.2023 அன்று நடைபெற்ற விலைப்புள்ளியில் கீழ்கண்டவாறு மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. வரப்பெற்ற விலைப்புள்ளிகளின் ஒப்பு நோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>(அட்டவணை கீழே)<br>மேற்கண்ட மூன்று விலைப்புள்ளிகளில் வரிசை எண்-1ல் குறிப்பிடப்பட்டுள்ள Sri Ramdev Plastics சீர்காழி, என்ற நிறுவனம் கொடுத்துள்ள குறைந்த விலைப்புள்ளியை மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலக குறிப்பு:</u> 1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணிகள் மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம்.<br>ந.க.எண்: 2845/2022/எச்1 | தீர்மான எண்-974, நாள்.19.06.2023<br>அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. |

| வ.எண் | நிறுவனத்தின் பெயர், முகவரி | விலைப்புள்ளிதொகை |
|---|---|---|
| 1. | Sri Ramdev Plastics 1/9, E.V.R. Street Sirkali | Clip 1Kg= 120/- Tape = 180/- |
| 2. | Ambay Store, 1/5, E.V.R. Street, Sirkali | Clip 1Kg=130/- Tape= 200/- |
| 3. | நேஷனல் எலக்ட்ரிக்கல்ஸ் நெ.21,24 ஈ.வே.ரா பழைய பேருந்து நிலையம் சீர்காழி. | Clip 1Kg=140/- Tape =210/- |

| | | |
|---|---|---|
| பொருள் எண்-27 | சீர்காழி நகராட்சிகுட்பட்ட பகுதிகளில் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் தஞ்சாவூர், மற்றும் மாவட்ட சுகாதார நலப் பணிகள் இணை இயக்குநர் மயிலாடுதுறை ஆகிய உயர் அலுவலர்களுக்கு தினந்தோறும் தற்காலிக DBC பணியாளர்களால் கொசு புழுக்கள் அழித்தல், முதிர் கொசுக்களை அழித்தல் போன்ற பணிகளில் ஈடுபடும் DBC (Domestic Breeding Checkers) பணியாளர்கள் மற்றும் பணியின் விவரத்தை உரிய படிவத்தில் பூர்த்தி செய்து தெரிவிக்க வேண்டியுள்ளது.<br>மேலும் நகரின் பொதுமக்கள், தன்னார்வ தொண்டு நிறுவன பிரதிநிதிகள், மக்கள் பிரதிநிதிகள் மூலம் பெறப்படும் புகார்களின் மீது நடவடிக்கை மேற்கொள்ளவும், தமிழக அரசின் உத்திரவுப்படி கொரோனா தடுப்பூசி போடப்படும் காலங்களில் DBC பணியாளர்களின் பங்கு முக்கியதுவம் என்பதாலும், மழைக் காலங்களில் ஏற்படும் காய்ச்சல் கண்ட வீடுகளுக்கு சென்று தகவல் சேகரித்தல், மற்றும் 6 Day Block என்ற சுழற்ச்சி முறையில் குடியிருப்பு பகுதிகளுக்கு சென்று தண்ணீரில் உள்ள கொசுப் புழுக்களை அழித்தல், தேவையான நேரங்களில் நில வேம்பு கசாயம் வழங்குதல் போன்ற அத்தியாவசிய பணிகளில் பணியாளர்களை பயன்படுத்த வேண்டியுள்ளது அவசியமாகிறது.<br>எனவே மாவட்ட ஆட்சித் தலைவர் மயிலாடுதுறை அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.8945/2022/ஈ1 நாள்: 24.08.2022 ஆம் தேதிய உத்திரவில் குறிப்பிடப்பட்டுள்ள விலை விகிதமான நாள் ஒன்றுக்கு ரூ.460/– என்ற விகிதத்தில் இவ்வலுவலக ந.க.எண்.2187/2019/எச்.1 நாள்:06.08.2020 செயல்முறை ஆணையின் படி இந்நகராட்சியில் மகளிர் சுய உதவிக்குழுவின் மூலம் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்படி பணியாளர்களின் பணிக்காலம் 31.05.2023 ஆம் தேதியுடன் முடிவடைவதால், நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்கள் சென்னை அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.2571/2017/J1 நாள்:23.04.2018ல் குறிப்பிடப்பட்டுள்ள அளவுகோலின்படி, மேலும் மூன்று மாதகாலத்திற்கு 32 DBC பணியாளர்களை தற்காலிகமாக தினக்கூலி அடிப்படையில், 01.06.2023 முதல் 31.08.2023 வரையிலான காலத்திற்கு ''அன்னை மகளிர் சுய உதவிக்குழுவின்'' மூலம் பணிக்கு அமர்த்தி பணிகள் மேற்கொள்ளவும் அதற்காகும் செலவினம் தொகை **ரூ.13,24,800/–**ற்கு நகராட்சி பொதுநிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலக குறிப்பு:</u> 1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. நகர் மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணிகள் மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம்<br>ந.க.எண்: **2612/2020/எச்1.** | தீர்மான எண்-975, நாள்.19.06.2023<br>அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. |
| பொருள் எண்-28 | சீர்காழி நகராட்சியில் அலுவலககட்டிட வளாகத்தில் உள்ள 12 இலட்சம் கொள்ளவுக்கொண்ட மேல்நிலை நீர்தேக்கதொட்டியினை தாங்கியுள்ள 30 எண்ணிக்கையிலான தூண்களை பழுது நீக்கம் செய்து பராமரிப்பு பணிக்கு 25.04.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு, (see table below) | தீர்மான எண்-976, நாள்.19.06.2023<br>அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. |

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்த மதிப்பீட்டைவிட ரூ. |
|---|---|---|
| 1 | திரு.முகமது ரபிக்,ஒப்பந்ததாரர், டி.பி.ரோடு,சீர்காழி | (-) 0.07% குறைவு |
| 2 | திருமதி.டி.ஜீவா ஒப்பந்ததாரர், திருமஞ்சனவீதி சீர்காழி. | (+) 0.56% அதிகம் |

மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில் குறைவான (-) 0.07% குறைவான ஒப்பந்தபுள்ளி வழங்கியுள்ள திரு.முகமது ரபிக், சீர்காழி என்பவரின் ஒப்பந்தபுள்ளியை ஏற்று நகர்மன்றதலைவரின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதனை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:</u> நகர்மன்றதலைவரின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதனை மன்றம் ஏற்கலாம்.

ந.க.எண்- **357/2023/இ1**

<table>
<tr>
<td>பொருள் எண்-29</td>
<td>சீர்காழி நகராட்சியில் அலுவலக கட்டிடத்தில் பொதுசுகாதாரப்பிரிவு நகரமைப்பு பிரிவு பொதுபிரிவு கழிவறைகளை சீரமைத்தல் மின்சார வசதிகள் மின்சாதன உபகரணங்கள் பழுதுநீக்கம் பணி ஆணையாளர் அறை காசாளர் அறை அலுமினியம் கதவுகளை சரிசெய்யும் பணி மற்றும் பழைய ஆதார்மையத்தினை புதுபித்து அங்கு வரிவசூல் மையம் அமைக்கும் பணிக்கு 25.04.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட விவரப்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ.எண்</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>ஒப்பந்த மதிப்பீட்டைவிட ரூ.</th></tr>
<tr><td>1</td><td>ஸ்ரீ கான்ராக்டர்ஸ், பிடாரி கீழ வீதி,சீர்காழி</td><td>(-) 0.04% குறைவு</td></tr>
<tr><td>2</td><td>திருமதி.டி.ஜீவா ஒப்பந்ததாரர், திருமஞ்சனவீதி சீர்காழி.</td><td>(+) 0.02% அதிகம்</td></tr>
</table>
மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில் குறைவான (-) 0.04% குறைவான ஒப்பந்தபுள்ளி வழங்கியுள்ள ஸ்ரீ கான்ராக்டர்ஸ், சீர்காழி என்பவரின் ஒப்பந்தபுள்ளியை ஏற்று நகர்மன்றதலைவரின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதனை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br>
அலுவலக குறிப்பு: நகர்மன்றதலைவரின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதனை மன்றம் ஏற்கலாம்.<br>
ந.க.எண்- 358/2023/இ1</td>
<td>தீர்மான எண்-977,<br>நாள்.19.06.2023<br>அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.</td>
</tr>
<tr>
<td>பொருள் எண்-30</td>
<td>சீர்காழி நகராட்சியில் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் மாவட்ட ஆட்சியர் அவர்களின் கடித ந.க.எண்:112/செமதொஅ/2022 நாள் 09.12.2022 படி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்ட (முத்தான திட்டங்களான மகளிருக்கான இலவச பேருந்து பயண திட்டம் மற்றும் புதுமைப் பெண் திட்டம்) மற்றும் மாற்று திறனாளிகளுக்கு ஊக்கதொகை ஆகிய விளம்பர பலகைகளை 10 அடி உயரம் x 12 அடி அகலம் கொண்ட விளம்பர பலகைகள் நகர பகுதிகளில் மக்கள் அதிகமாக கூடும் இடங்களில் 6 எண்ணிக்கைகளில் நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று ரூ.30,000/–செலவீல் அமைக்கப்பட்டது. பணியின் அவசரம் அவசியம் கொண்டு தமிழ்நாடு நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15–ன் கீழ் செலவீனம் மேற்கொள்ளப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br>
<u>அலுவலக குறிப்பு</u> : 1) நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று செலவீனம் மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம்.<br>
ந.க.எண்- 542/2023/இ1 /</td>
<td>தீர்மான எண்-978,<br>நாள்.19.06.2023<br>அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.</td>
</tr>
<tr>
<td>பொருள் எண்-31</td>
<td>சீர்காழி நகராட்சி வார்டு எண் 5 ஈசானியத்தெருவில் அமைந்துள்ள எரிவாயு தகன மேடையில நீர்மூழ்கி மோட்டார், சிலிண்டர் குடோன் சீட், பெயிண்டிங் செய்திடவும் தற்காலிக தகன எரியூட்டும் மேடை பராமரிப்பு மற்றும் கண்காணிப்பு கேமரா பொருத்துதல் ஆகிய பணிகளுக்கு ரூ 5.00 இலட்சத்தில் பணிகள் நடைபெற நடவடிக்கைகள் தொடரவும் இச்செலவீனத்தினை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>
<u>அலுவலக குறிப்பு</u> : 1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>
ந.க.எண்- 569/2022/இ1</td>
<td>தீர்மான எண்-979,<br>நாள்.19.06.2023<br>அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.</td>
</tr>
</table>

நாள்:19-06-2023 நகர்மன்றத் தலைவர்,

இடம்:சீர்காழி சீர்காழி நகராட்சி.

## சீர்காழி நகராட்சி



**2023–ம் ஆண்டு ஜுன் மாதம் 19–ஆம் தேதி நாள்.19.06.2023 திங்கள் கிழமை காலை 11.30 மணிக்கு நகர்மன்ற கூடத்தில் நடைபெற்ற அவசர கூட்டம் நடவடிக்கை.**

**திருமதி.R.துர்காபரமேஸ்வரி.MBA.,**
**நகர்மன்ற தலைவர்,**
**சீர்காழி நகராட்சி.**

| | | |
|---|---|---|
| பொருள் எண்-1 | தமிழ்நாடு சட்டமன்ற அறிவிப்பின்படி, மாண்புமிகு நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் அவர்கள் 2023–24 ஆம் ஆண்டு சட்டமன்ற கூட்டத் தொடரில் நகராட்சி நிர்வாகத்துறை மான்ய கோரிக்கையின் போது, சீர்காழி நகராட்சி பேருந்து நிலையம் நவீன முறையில் மேம்படுத்தப்படும் என்ற அறிவிப்பினை வெளியிடப்பட்டுள்ளதால், இதற்கான **ரூ350.00** இலட்சத்திற்கும் மற்றும் **ரூ.50.00** இலட்சத்திற்கு பராமரிப்பு பணிக்கும் ஆக கூடுதல். **ரூ400.00** இலட்சத்திற்கு உரிய திட்ட மதிப்பீடுகள் தயார் செய்து நிர்வாக அனுமதி பெற நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு திட்ட பிரேரணை அனுப்ப வேண்டி மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><u>அலுவலக குறிப்பு</u> : மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்798/2023/இ1 | தீர்மான எண்-980, நாள்.19.06.2023 அலுவலகக் குறிப்பு **அங்கீகரிக்கப்பட்டது. திருத்தம் ரூ.50.00** இலட்சத்திற்கு பராமரிப்பு பணிக்கும் ஆக கூடுதல் **ரூ400.00** இலட்சத்திற்கு உரிய திட்டமதிப்பீடுகள் **அங்கீகரிக்கப்பட்டது.** |
| பொருள் எண்-2 | தமிழ்நாடு சட்டமன்ற அறிவிப்பின்படி, மாண்புமிகு நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் அவர்கள் 2023–24 ஆம் ஆண்டு சட்டமன்ற கூட்டத் தொடரில் நகராட்சி நிர்வாகத்துறை மான்ய கோரிக்கையின் போது, சீர்காழி நகராட்சிக்குட்பட்ட பகுதியில் தினசரி புதிய மீன் மார்கெட் கட்டிடம் கட்டும் பணிக்கு அறிவிப்பினை வெளியிடப்பட்டுள்ளதால், இதற்கான உரிய **ரூ120.00** இலட்சத்திற்கு திட்ட மதிப்பீடுகள் தயார் செய்து நிர்வாக அனுமதி பெற நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு திட்ட பிரேரணை அனுப்ப வேண்டி மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><u>அலுவலக குறிப்பு</u> : மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்798/2023/இ1/அ | தீர்மான எண்-981, நாள்.19.06.2023 அலுவலகக் குறிப்பு **அங்கீகரிக்கப்பட்டது.** |

நாள்:19-06-2023
இடம்:சீர்காழி

நகர்மன்றத் தலைவர்,
சீர்காழி நகராட்சி.